YMCA Y.M.CA.

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELAANATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 21 | [06 09-1993] | திங்கட்கிழமை | ஓசை 200

## இந்திய மீனவர் சடலம் இலங்கையில் தகனம் செய்ய உறவினர் அனுமதி

பருத்தித்துறை கடலில் அண்மையில் சிறிலங்கா கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட இந்திய மீனவரின் சடலத்தை இலங்கையிலேயே தகனம் செய்துவிடுவதற்கு அம் மீனவர்களின் உறவினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதேவேளை இச் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய மீனவர்களை விரைவில் தம்மி...ம் ஒப்படைக்கும்படி அவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடற்புலிகள் எனக்கருதி பருத்தித்துறைக் கடலில் கடந்த வார நடுப்பகுதியில் சிறிலங்கா கடற்படை இந்திய மீன்பிடி இழுவைப்படகு ஒன்றின்மீது நடாத்திய தாக்குதலில் ஒரு மீனவர் பலியானதும் ஏனைய நால்வர் காயமடைந்ததும் தெரிந்ததே. காயமடைந்த இந்திய மீனவர்கள் தற்போது வடபகுதி இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு?

# சமஷ்டி அமைப்பை கூட அரசு ஏற்றுக்கொள்ள தயாரில்லை!

## பௌத்தர்கள் மதமாற்றம்

(கொழும்பு)

உள்நாட்டவர்களினாலும் வெளிநாட்டவர்களினாலும் பௌத்தர்கள் ஏனைய மதங்களுக்கு மாற்றப்படுகின்றனர். இந்த மதமாற்றம் வெளிநாட்டு அமைப்புகளினால் நன்கு திட்டமிடப்பட்டு ஒரு குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதற்கான போதிய ஆதாரங்கள் உண்டு என அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மத மாற்ற நடவடிக்கைகள் கிராமப்புறங்கள் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் பாரிய அளவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. பௌத்த காங்கிரஸ் இது குறித்து கவலைப்படுகின்றது அரசியல் ரீதி

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## குடியேற்றத்திற்கு வசதி போதாது

(கொழும்பு)

உயர் அதிகாரிகள் பெறும் நன்மைகளில் நான்கில் ஒரு பகுதியைத்தானும் மகாவலி 'சி' வலயத்திற்கு மகாவலி அபிவிருத்திச் சபை வழங்கியிருந்தால் அப்பகுதி ஒரு சுவர்க்க பூமியாக இன்று மாறியிருக்கும்.

பல அதிகாரிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பஜ்ரோ வாகனங்களில் பயணம் செய்கிறார்கள். வாகனங்களில் போய் சாராயம், சிகரெட், பழவகைகள் முதலியவற்றை வாங்குகிறார்கள். இதேவேளை இங்கு குடியமர்த்தப்பட்டவர்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் தங்களது தேவைக்குரிய பண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விடுதலைப் புலிகள் வித்தியாசமானவர்கள்

-மலேசிய பத்திரிகை

[கோலாலம்பூர்]

உலக விடுதலைப் போராட்டங்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மாறுதலான புரட்சியாளர்களாக காணப்படுவதாக மலேசியா பத்திரிகையான ஸ்ரெய்ட் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. தமிழீழம் எனும் தனிநாடு அமைக்க அவர்கள் போராடுகின்றனர். இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் அவர்கள் அரசபடைகளுடன் போரிடுகின்றனர்.

சிறிலங்கா கடற்படையின் ரோந்துப்படகுகளுடன் யாழ். குடாக்கடலில் நடத்தப்பட்ட சமர்கள் மூலம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணி கவனத்தை ஈர்த்தது. கடலில் கடற்புலிகள் உலாவரத் தொடங்கியிருப்பது சிறிலங்கா கடற்படைக்கும் இராணுவத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பி.பி.ஸிக்கு அன்ரன் பாலசிங்கம்

(லண்டன்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அமைப்பிலான ஆட்சி முறையைக் கூட சிறிலங்கா அரசாங்கம் ஏற்காது எதிர்த்து நிற்கின்றது. அனேகமாக தெற்கிலுள்ள பிரதான சிங்களக் கட்சிகள் எல்லாம் சமஷ்டி ஆட்சிமுறைக்கு எதிராகவே உள்ளன. இவ்வாறு அண்மையில் பி.பி ஸி. செய்தியாளருக்கு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்ற எண்ணக்கருவையும் சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. சமீபத்தில் நோபல் பரிசு பெற்றவர்கள் முன்வைத்த தீர்வுத் திட்டத்தையும் வடக்கும், கிழக்கும் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்கள் என்பதை முழுமையாக அங்கீகரித்திருப்பதோடு, ஒரு சமஷ்டி ஆட்சி முறைக்கான ஆலோசனையையும் முன்வைத்தார்கள். நாம் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பே அரசு நிராகரித்து விட்டது என்றும் தெரிவித்தார்.

மேலும் சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த எப்பொழுதும் வர லாம் எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் பற்றி ஒரு தவறான அபிப்பிராயமே நிலவுகின்றதென்றும், விடுதலைப் புலிகள் ஒரு வளைந்து கொடுக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவையினர் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னார்மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு நாலாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சமூகவிரோதிகளின் ஆணையுடன் கைது செய்யப்பட்ட இந்த செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குற்றப்புலன் விசாரணைப் பிரிவான 4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் கைது செய்யப்பட்டதனால் மன்னார் மாவட்டத்தில் இலங்கைச்செஞ்சிலுவைச்சங்கத்தின் பணிகள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. [நி]

## குமாரி, ருகுணு கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி பருத்தித்துறையில் ஆரம்பம்

## கிளாலி-பூநகரி

## அரசின் நிபந்தனையில் மாற்றமேதுமில்லை

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

உலக விடுதலைப் போராட்டங்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மாறுதலான புரட்சியாளர்களாக காணப்படுவதாக மலேசியா பத்திரிகையான ஸ்ரெய்ட் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. தமிழீழம் எனும் தனிநாடு அமைக்க அவர்கள் போராடுகின்றனர். இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் அவர்கள் அரசபடைகளுடன் போரிடுகின்றனர்.

சிறிலங்கா கடற்படையின் ரோந்துப்படகுகளுடன் யாழ். குடாக்கடலில் நடத்தப்பட்ட சமர்கள் மூலம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணி கவனத்தை ஈர்த்தது. கடலில கடற்புலிகள் உலாவர தொடங்கியிருப்பது சிறிலங்கா கடற்படைக்கும் இராணுவத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

லாட சமஷ்டி ஆட்சிமுறைக்கு எதிராகவே உள்ளன. இவ்வாறு அண்மையில் பி.பி.ஸி. செய்தியாளருக்கு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்ற எண்ணக்கருவையும் சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. சமீபத்தில் நோபல் பரிசு பெற்றவர்கள் முன்வைத்த தீர்வுத் திட்டத்தையும் வடக்கும், கிழக்கும் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்கள் என்பதை முழுமையாக அங்கீகரித்திருப்பதோடு, ஒரு சமஷ்டி ஆட்சி முறைக்கான ஆலோசனையையும் முன்வைத்தார்கள். நாம் அதைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பே அரசு நிராகரித்து விட்டது என்றும் தெரிவித்தார்.

மேலும் சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த எப்பொழுதும் வரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் பற்றிய ஒரு தவறான அபிப்பிராயமே நிலவுகின்றது என்றும், விடுதலைப் புலிகள் ஒரு வளைந்து கொடுக்

(4ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

மன்னார்மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு நாலாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சமூகவிரோதிகளின் துணையுடன் கைது செய்யப்பட்ட இந்த செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவான 4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் கைது செய்யப்பட்டதனால் மன்னார் மாவட்டத்தில் இலங்கைச்செஞ்சிலுவைச்சங்கத்தின் பணிகள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. [நி]

### குமாரி, ருகுணு கப்பல்களிலிருந்து

# பொருள்கள் இறக்கும் பணி பருத்தித்துறையில் ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் ஒருவாரகால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் நேற்று கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமானது. நேற்றுக் காலை இத் துறைமுகத்திற்கு 'குமாரி, ருகுணு ஆகிய இரண்டு கப்பல்கள் வந்ததையடுத்து பொருள்கள் இறக்கப்பட்டன.

கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பலுடன் நிறுத்தப்பட்ட பொருவகள் இறக்கும் வேலைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. யாழ் திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், பிரதம லிகிதர் திரு. விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் கப்பல்களுக்குச்சென்று திரும்பியதை அடுத்து வேலைகள் ஆரம்பமானது.

ஒருவார காலமாக வெறிச்சோடிக்கிடந்த இத் துறை முகப்பகுதி இன்று கலகலப்படைந்தது.

பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று காலையில் வந்த 'குமாரி' கப்பலில் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவர பட்டன. இக் கப்பலில் அரிசி, பருப்பு, டீசல், மண்ணெண்ணெய், மருந்து வகைகள், ஹைலண்ட் மா வகைகள், யாழ் மாவட்ட கட்டுறவுச் சமாசத்திற்கு உணவுப் பொருள்கள், பனை அபிவிருத்திச்சபைக்கு மண்ணெண்ணெய், காகிதாதிகள், தட்டச்சு, துவிச்சக்கரவண்டிகள், அலுமாரிகள், சீனி, ஆகியனவும் எடுத்துவரப்பட்டன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இளாலி-பூநகரி படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# அரசின் நிபந்தனையில் மாற்றமேதுமில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

"விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த அரசு கதவை திறந்தே வைத்துள்ளது ஆனால் 1990இல் அரசினால் விடுக்கப்பட்ட, போரைக் கைவிடவேண்டும், ஆயுதங்களைக் கைவிடவேண்டும் போன்ற நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கத்தினரின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் இன்னும் 3 அல்லது நான்கு மாதங்களில் ஒழிக்கப்பட்டுவிடும் என இராணுவ புலனாய்வாளர்கள் கூறியுள்ளனர். விடுதலைப்புலிகள் இப்போது கடும் அழுத்தத்தில் உள்ளனர். இதனால் நிலைமையை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள தமது தாக்குதல்களை அவர்கள் அதிகரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுகளின் போது ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க வகைசெய்யப்படும். தமிழர்களின் பிரதிநிதிகள் என புலிகள் தம்மை கூறமுடியாது. வேறு அரசியல் கட்சிகளும் இருக்கின்றன" என்றார பிரதமர் ரணில.

சமரச முயற்சியில் ஐ. நா. சம்பந்தப்படுவதை சிறிலங்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

# அல்லிப்பளையில் புக்காரா நள்ளிரவில் தாக்கு

(தென்மராட்சி)

நேற்று முன்தினம் நள்ளிரவு அல்லிப்பளை இறங்கு துறையில் இருபுக்காரா விமானங்கள் அகோர குண்டு வீச்சுத் தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. இதனால் பொதுமகன் ஒருவர் காலில் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் ஆனையிறவு பக்கமாக இருந்து திடீரென அல்லிப்பளை இறங்கு துறைக்கு வந்தன. இருமுறை வட்டமிட்ட விமானங்கள் இறங்குதுறையில் குண்டு வீச்சை நிகழ்த்தின. வீசிய முதலிரு குண்டுகளும் வெடிக்கவில்லை மூன்றாவது குண்டு கடற்கரையில் வீழ்ந்து வெடித்தது.

இத்தாக்குதலை தொடர்ந்து கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது புக்காரா விமானங்கள் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது அல்லிப்பளை கடற்கரைப் பகுதியில் தேநீர் கடை ஒன்றில் படுத்திருந்த தாக்குதலுக்கு அஞ்சி வெளியே ஓடிவந்த க. செல்வரத்தினம் (வயது 18) என்பவர் காலில் காயமடைந்தார்.

விமானங்கள் நள்ளிரவு தாக்குதல் நடத்தியதால் மக்கள் பீதியுடன் காணப்பட்டனர். சிலர் பாதுகாப்பு இடங்களை நோக்கி ஓடினர். விமானங்கள் சென்ற பின்னரும் கூட மக்கள் வீடுகளுக்கு திரும்பாது வீதிகளிலேயே பீதியுடன் நின்றதை அவதானிக்க முடிந்தது. (86)

# இரு கடற்படை படகுகள் வடமராட்சி கடலில் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களை இலக்கு வைத்து பீரங்கி வேட்டுக்களை பொழிந்தனர்.

நேற்றுக்காலை 5-30 மணியளவில் இன்பருட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை பகுதிகளில் பீரங்கி முழக்கங்கள் இடைவிடாது அரைமணி நேரமாக முழங்கிய வண்ணமிருந்தது.

பீரங்கி முழக்கங்களின் போது இடையிடையே 50 கலிபர் தாக்குதல்களும் நடைபெற்றன. இரண்டு விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் கடலில் நிலை கொள்ளாமல் அங்கு மிங்குமாக ஓடித்திரிந்து தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடற்படையினரின் பீரங்கி முழக்கங்களாலும், கலிபர் தாக்குதல்களாலும் இக் கடற்பரப்பு சில மணி நேரம் அதிர்ந்தது. எனினும் சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் ஏதும் கிடைக்கவில்லை. தாக்குதல்களை செய்த கடற்படை படகுகள் அவ்விடத்தை விட்டு விரைவாக ஓடி மறைந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (யோ)

## தீவுப்பகுதி இராணுவம் தினமும் மாலை ஷெல் தாக்கு

(குருநகர்)

மாலை 5 30 மணிக்குப் பிற்பாடு தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை கடந்த ஒரு சில தினங்களாக நடத்தி வருகிறது.

எறிகணைகள் கல்லுண்டாய் நவாலிக் கரையோர வயல் வெளிகளில் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடிப்பதால் கல்லுண்டாய் பாதையூடாக பிரயாணம் செய்வர்கள் அச்சத்துடன் பிரயாணம் செய்ய நேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## மலேரியா பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்து தரப்பினருமே இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். [22]

## வர்த்தகர் கலந்துரையாடல்

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடலில் யாழ் மாவட்ட வர்த்தக

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஆயுதங்களுடன் கனேடிய கப்பல் இலங்கை நோக்கி வருகிறதாம்

## இந்திய கடற்படை உஷார்

(சென்னை)

இலங்கையின் வடபகுதியை நோக்கி ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் ஏற்றிக் கொண்டு கனடா கப்பல் ஒன்று வந்துகொண்டிருப்பதாக இந்திய மத்திய புலனாய்வு நிறுவனத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாம். இதனையடுத்து தெற்கு கேரளா தமிழ்நாடு கரையோரம் முழுவதும் இந்தியக் கடலோரக் காவற்படையினர் தமது இரவு நேர கண்காணிப்பை அதிகரித்துள்ளனர்.

இந்தியக் கடற்படை, கரையோரக் காவற்படை, சுங்கப் பகுதி என்பன இணைந்து இந்தியாவின் தென்கோடி கரைப்பகுதியில் கடல்ரோந்தை அதிகரித்துள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கு பகுதி நோக்கி இந்த கனடிய கப்பல் நார்வதாகவும் கப்பலில் உள்ள வெடிமருந்துகளும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளுக்கே எடுத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு வாதுவ செல்ல பணிப்பு

வடபகுதி செல்லும் உணவுக்கப்பல்களுக்கு சர்வதேச செஞ்சிலுவை பாதுகாப்பு வழங்க மீண்டும் உறுதியளித்ததையடுத்து திருக்கோணமலை சென்ற வாதுவ கப்பல் மீண்டும் பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனரின் அங்கமன தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பருத்தித்துறையில் மாவு இறக்கும் பணியை இடைநிறுத்தி திருமலை திரும்பிய வாதுவ மீண்டும் பருத்தித்துறை செல்ல பணிக்கப்பட்டுள்ளதாகவும் பிரிகேடியர் அங்கமன தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### இசை வகுப்புகள்

ORGAN, DRUMS புதிய வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. குறுகிய காலத்தில் நீங்களும் ஒரு இசைக்கலை ஞானாக வர நாடுங்கள் "ஸப்தஸ்வரம்" இசைக்கல்லூரி (ஸப்தஸ்வரா இசைக்குழு) 200/1 கண்டிவீதி ஸ்ரீபார்வதி வித்தியாலயம் முன்பாக, அரியாலை, யாழ்ப்பாணம். (5844)

### பாடகர்கள் பாடகிகள் தேவை

பிரபல்யமான இசைக்குழு ஒன்றிற்கு பாடகர்களும், பாடகிகளும் தேவை. அனுபவம் உடையவர்களும் புதியவர்களும் ஆர்வமுடையவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுவர். 15-9-93 அன்று கீழ்வரும் முகவரிக்கு காலை 10 மணியளவில் சமூகம் தரவும். 'ஸப்தஸ்வரம்'' இசைக்கல்லூரி 200/1 கண்டிவீதி, அரியாலை. யாழ்ப்பாணம். (5847)

### அராலியூராரின் நாடகங்கள்

1955, 1956ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில், பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்த- 250 நாடகங்களை எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள் 1. வெட்டிக்காரர்கள் 2 முதலாம்பிள்ளை 30/- (5838)

### காவேரி சீயாக்காய்ப்பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்யும் சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காதீர்கள். காவேரி சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்டு வாங்குங்கள் தயாரிப்பாளர் கந்தசாமி அண் சன்ஸ், ஆடியபாதம்வீதி, நல்லூர். (5831)

### மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர்புதியஉலகம்! புதுமை - இனிமை - அனைத்தும் நிறைந்த ''மதுச்சாலை'' 812. பருத்தித்துறை வீதி, [முத்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

### வைத்திய சேவை

ஆயுர்வேதமுறைப்படி

# ஜனநாயகம் நிலைப்பதற்கு அரசியலமைப்பே காரணம்

**- ஜே.ஆர். ஜெயவர்த்தனா**

(கொழும்பு)

இந்த அரசியலமைப்பில் ஜனநாயகம் இல்லை என்று கூறி விட முடியாது. இந்த அடிப்படையிலேயே பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை 1982-ம் ஆண்டில் முன்னைய அரசாங்கம் நடத்தியது இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய அரசியலமைப்பின் பிதாமகருமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

தற்போதைய அரசியலமைப்புக்கு மாற்றம் அவசியமா என்ற தலைப்பின் கீழ் தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போதைய அரசியலமைப்பை தூக்கி எறிவதற்கு முன்னர் அதிலுள்ள நல்ல அம்சங்கள் பலவற்றையும் தட்டிக் கழித்து விடாமல் அவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அரசியலமைப்பு 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பின்னர் இதற்கு பல திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளன. இவ்வாறு திருத்தங்கள் செய்யக் கூடியதாகவுள்ள நிலையில் புதிய மாற்றங்கள் அல்லது மறுபரிசீலனை பற்றி ஏன் ஆராய வேண்டியுள்ளது. மேலும் அரசியலமைப்பு சட்டம் அதற்காக வேலை செய்பவர்களிலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது. இந்தக் குழந்தையை தூக்கி எறிந்து விட வேண்டாம் என்று நான் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இந்தக் குழந்தையிடம் பல நல்ல அம்சங்கள் உள்ளன. இந்த அரசியலமைப்பில் இருக்கும் பல நல்ல அம்சங்களையும் பேணிப் பாதுகாப்பது அவசியம்.

மக்கள் மத்தியில் நீண்ட காலப் பிரச்சினையாக இருந்து வந்த மொழிப் பிரச்சினையை இரண்டு மொழிகளையும் உத்தியோக பூர்வ மொழியாக அங்கீகரித்ததின் மூலம் முதன் முதலில் இறுதியானதொரு தீர்வைக் கண்டது இந்த அரசியலமைப்பே. பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பின் மூலமே இன்றைய வன்முறைகளுக்கு மத்தியிலும் ஜனநாயகம் நிலைத்து இருக்கிறது. எனவே அதனைப் பாதுகாப்பது அவசியம் என்றும் தெரிவித்தார்.

## சர்வாதிகார ஆட்சிக்கு அரசியலமைப்பு உதவுகிறது.

**-காமினி திசாநாயக்க**

[கொழும்பு]

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபோது இன்றைய அரசியலமைப்பு திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்என்று அப்போதைய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவிடம் கேட்டோம். அவர் பின்னர் இதைப்பற்றி ஆராயலாம் எனக் கூறி விட்டார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி திசாநாயக்கா தெரிவித்தார். தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் மண்டபத்தில இன்றைய அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டுமா என்ற தலைப்பின் கீழ் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில்,

இந்த விடயம் இன்றுதான் விவாதத்திற்குரிய முக்கிவிடயமாகியுள்ளது. இத்திட்டம் உருவாக்கப்பட்டு இன்று பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. இப்போது இதற்குப் புதிய மாற்றங்கள் செய்யப்படாதா? [illegible]

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பது என்ற பெயரில் பாராளுமன்ற தெரிவுக்குழு, வட்டமேசை மாநாடு. சர்வகட்சி மாநாடு என்று பல நடாத்தப்பட்டன. ஆனால் முடிவுதான் எதுவுமில்லை, பொதுமக்களின் பணம் செலவானதுதான் மிச்சம் ஐதேக மட்டும்தான் இப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காத கட்சியாக இதுவரை உள்ளது.

இரண்டாவது சபைக்கான திட்டம் ஒன்று தொடர்பாகவும் நாம் சிந்திக்க வேண்டும். அர்த்தமுள்ள ஜனநாயகத்துக்கு உதவுவதாக இருக்கவேண்டும். அரசியலமைப்புக்கு மாற்றம் செய்வது தொடர்பாக ஆராயும்போது தமிழர் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்

### மணிவிழாவுக்கு ஏற்பாடு

சித்தன்கேணி கலைநாரி நேருஜி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தின [illegible]

## நாடகங்கள் மேடையேற்றம்

கலைமணி நாடகமன்றத்தின் அரிச்சந்திர மயான கண்டமும், கலையரசு நாடக மன்றத்தின் காலடிச்சுவடுகள் நாடகமும் அண்மையில் நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய முன்றலில் மேடையேற்றப்பட்டது. பெருந்திரளான ரசிகர்கள் முன்னிலையில் மேடை யேற்றப்பட்ட அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திரமதியாக நடித்த நடிகமணி வைரியநாதனை மானிப்பாய் பாரிஷ் பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் மா.செல்வராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## அடிக்கடி திருத்தப்படுவதே மாற்றத்தை வலியுறுத்தும்

**- திருமதி சந்திரிகா குமாரணதுங்க**

(கொழும்பு)

இந்த அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு குறுகிய காலத்திலேயே அதற்கு பதினாறு திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன இது அதனை மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது. இவ்வாறு மேல்மாகாணசபை முதலவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் மண்டபத்தில் அண்மையில் இன்றைய அரசியலமைப்பு மாற்ற வேண்டியது அவசியமா என்ற தலைப்பின் கீழ் நடந்த கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டுமா? என்ற கேள்விக்கு நாம் இல்லை என்றே பதில் அளிப்போம் ஏனெனில் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறை அபாயமானது.

தற்போதைய அரசியலமைப்பு பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதியே பொறுப்புள்ளவர் கூறுகிறது இதன்மூலம் பாராளுமன்றம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்பு அமெரிக்காவினதும், பிரான்சினதும் அரசியலமைப்புக்களை ஒத்தது என்று கூறப்படுகின்றது ஆனால்அமெரிக்காவைப் பொறுத்த வரை ஜனாதிபதி நினைக்கும் போது காங்கிரஸைக் கலைத்து விட முடியாது அதேபோல பிரான்சிலும் ஜனாதிபதி தன்னிச்சையாக இயங்குவதை அரசியலமைப்பு தடுக்கின்றது

சுமார் 16 வருடகால அனுபவத்தில் நாட்டின் பிரதானமான பிரச்சினைகள் இரண்டுக்கும் தீர்வு காண இந்த அரசியலமைப்பு தவறி விட்டது நாட்டின் 2,500 ஆண்டு கால வரலாற்றில் கண்டிராத இரத்தக் களரியை இந்த அரசியலமைப்பு அமுல் செய்யப்பட்ட காலப்பகுதியிலேயே காண நேர்ந்துள்ளது.

இனப்பிரச்சினை, வறுமை ஆகிய இரண்டு பிரதான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு அரசியலமைப்பு தவறி விட்டது. இனப் பிரச்சினை தீர்வுக்காக கடந்தபத்து வருடகாலமாக நடைபெற்ற அனைத்து முயற்சிகளும்தோற்றுப் போய்விட்டன. இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான பாதையைக் கூட இந்த அரசியலமைப்பு காட்டவில்லை. கட்சி அரசியலைக் கைவிட்டு இப்பிரச்சினைக்கு இணக்கமான ஒரு தீர்வைக் காண்பதற்கு பிரதான கட்சிகள் அனைத்தும் இந்த வேளையிலாவது முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## ஆறு மாத சம்பளக் கடன் மட்டக்களப்பில் இன்னுமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தி [illegible]

படிவங்களை நகர்த்துவதில் ஆசிரியர்கள் படும்பாடு சொல் [illegible]

மட்டக்களப்பில்

## மூன்று வருடங்களில் 872 அரச ஊழியர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தினுள் 1983முதல் 1992 வருடம் வரை 20,040பேர் கொல்லப்பட்டுள்ளனர். எனவும் 5614 பேர் இக்காலத்தினுள் இடம்பெற்ற நடவடிக்கைகளின் போது காயமடைந்துள்ளனர் எனவும் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

1990ஆம் ஆண்டு முதல்இது வரை மட்டக்களப்பில் அரச ஊழியர்கள் 872பேர் கொல்லப்பட்டனர்எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் அவர்களுக்குரிய நிவாரணப் பணத்தைப் பெற முடியாது அலைகலாய்க்கின்றனர் எனவும் தெரியவருகிறது.

## 3-ம் ஆண்டு நிறைவின் நினைவலைகள்



மண்ணினில் மலர்வு: 1975-4-20

மண்ணிற்காக உதிர்வு: 1990-8-1

### வீரவேங்கை ஆண்டவன்

[சிலுவைராசா ஜெயபாஸ்கரன்]

கண்ணே நீ எனக் காத்திருந்தோம்
மண்ணே உயிர் என நீயும் சென்றாய்
விண்ணே அதிர்ந்திட போர் தொடுத்தாய்
ஆண்டவன் என்னும் பெயர் கொண்டாய்
முல்லையில் போர்க்கொடி தூக்கி நின்றாய்
வேங்கை அணி நின்று வித்தாகி வீழ்ந்திட்ட வித்தகனே
தமிழ் மண்ணிற்கு விதை ஆனாய்
நீ நிலத்தினில் சிந்தியது உதிரமடா
நிச்சயம் ஈழமாய் உதிக்குமடா.

அன்னாரின் நினைவு நிகழ்வுகள் இன்று எமதில்லத்தில் இடம்பெறும்.

மறவாமல் மனமுருகும்,
அம்பாள் வீதி, உடுவில். பெற்றோர், சகோதரர்கள். சகோதரிகள், உறவினர்கள்.

(5848)

## நினைவு கூருகின்றோம் ...

### 1993-09-06

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா புளியங்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கடத் [illegible]

## காவேரி சியாக்காய்ப்பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்யும் சியாக்காய்ப்பவுடர் என்று கேட்காதீர்கள். காவேரி சியாக்காய்ப்பவுடர் என்று கேட்டு வாங்குங்கள் தயாரிப்பாளர் கந்தசாமி அன் சன்ஸ், ஆடிய பாதம்வீதி, நல்லூர். (5831)

## மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர்புதியஉலகம்! புதுமை - இனிமை - அனைத்தும் நிறைந்த ''மதுச்சாலை'' 812. பருத்தித்துறை வீதி, [முத்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

## வைத்திய சேவை

ஆயுர் வேதமுறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளையும் குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய் கூந்தல் வளர் தைலங்களையும் பெற்றுக் கொள்ளலாம். வைத்தியர் ஐ. சந்தையா முருகானந்தா வைத்திய நிலையம் பள்ளிவாசல் அருகாமை மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [5824]

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இரண்டரைப் பரப்பு காணியும் வீடும் உடன் குடியிருப்பதற்கு ஏற்ற நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- சி. கனகேந்திரம் C/o. என். தில்லைவிநாயகம் பிரசித்த நொத்தாரிஸ். நல்லூர். (5836)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கேட்டோம். அவர் பின்னர் இதைப்பற்றி ஆராயலாம் எனக் கூறி விட்டார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி திசாநாயக்கா தெரிவித்தார். தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் மண்டபத்தில் இன்றைய அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டுமா என்ற தலைப்பின் கீழ் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில்,

இந்த விடயம் இன்றுதான் விவாதத்திற்குரிய முக்கியவிடயமாகியுள்ளது. இந்திட்டம் உருவாக்கப்பட்டு இன்று பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. இப்போது இதற்குப் புதிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்படவேண்டும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நான்கு வருடங்களாக குறைக்கப்படவேண்டும் என்பன இவற்றில் சில கோரிக்கைகளாகும்.

1989இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாஸ இந்த அரசியலமைப்பின் மூலம் ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொண்டார். எதிர்க்கட்சிகள் அடக்கப்பட்டன. அமைச்சர்கள் மிரட்டப்பட்டனர் குண்டர் கூட்டங்களும் அமைப்பு ரீதியான துணை ராணுவப் படைகளும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருந்தது கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் தடை செய்யப்பட்டன. பொலிஸ் பின் தொடர்ந்தது. தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டன இவற்றை எல்லாம் தட்டிக் கேட்கக்கூடிய நிலையில் எவரும் இருக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச முடியாத நிலையில் இருந்தபோது பாராளுமன்ற சிறப்புரிமைகள் எதற்கு நடாத்தப்பட்டன. ஆனால் முடிவுதான் எதுவுமில்லை, பொதுமக்களின் பணம் செலவானதுதான் மிச்சம் ஐ.தே.க. மட்டும்தான் இப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காத கட்சியாக இதுவரை உள்ளது.

இரண்டாவது சபைக்கான திட்டம் ஒன்று தொடர்பாகவும் நாம் சிந்திக்க வேண்டும் அர்த்தமுள்ள ஜனநாயகத்துக்கு உதவுவதாக இருக்கவேண்டும். அரசியலமைப்புக்கு மாற்றம் செய்வது தொடர்பாக ஆராயும்போது தமிழர் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வேண்டுமா? என்று கேள்விக்கு நாம் இல்லை என்றே பதில் அளிப்போம் ஏனெனில் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறை அபாயமானது.

தற்போதைய அரசியலமைப்பு பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதியே பொறுப்புள்ளவர் கூறுகிறது இதன்மூலம் பாராளுமன்றம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்பு அமெரிக்காவினதும், பிரான்சினதும் அரசியலமைப்புக்களை ஒத்தது என்று கூறப்படுகின்றது ஆனால்அமெரிக்க ... விட்டது. இனப் பிரச்சினை தீர்வுக்காக நடந்தபத்து வருடகாலமாக நடைபெற்ற அனைத்து முயற்சிகளும்தோற்றுப் போய்விட்டன. இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான பாதையைக் கூட இந்த அரசியலமைப்பு காட்டவில்லை. கட்சி அரசியலைக் கைவிட்டு இப்பிரச்சினைக்கு இணக்கமான ஒரு தீர்வைக் காண்பதற்கு பிரதான கட்சிகள் அனைத்தும் இந்த வேளையிலாவது முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## மணிவிழாவுக்கு ஏற்பாடு

சித்தன்கேணி கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தினரும் பொதுமக்களும் இணைந்து இளைப்பாறிய அதிபர் திரு. வே. தம்பையா அவர்களுக்கு மாபெரும் 'மணிவிழா' ஒன்றை வெகு கோலாகலமாக நடாத்தவுள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட முன்னாள் உபதலைவரும், கலைநகர் நேருஜி சனசமூக நிலைய கிராம முன்னேற்றச்சங்கத் தலைவரும், பிரபல சமூக சமயத்தொண்டருமான திரு வே தம்பையா அதிபர் அவர்கள் செய்த அளப்பரிய சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாகவே இந்த மாபெரும் மணிவிழா நடாத்தப் படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

### கிருஷ்ண ஜெயந்தி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி 20ஆவது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. விசேட ஆராதனை அபிஷேக வைபவங்களுடன் பல சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

# ஆறு மாத சம்பளக் கடன் மட்டக்களப்பில் இன்னுமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களில் பலரும் ஆறு மாத சம்பளத்தை முற்பணமாக பெறும் கடனுக்கு விண்ணப்பித்துள்ள போதும் அவர்களுக்கு இன்னமும் வழங்கப் படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் நடமாடும் சேவையில் இது பற்றி முறையிட்ட போதும் கூடஎவ்விதமான பலனும் கிடைக்கவில்லை என்றும், மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கடனுக்கானவிண்ணப்பப் படிவங்களை நகர்த்துவதில் ஆசிரியர்கள் படும்பாடு சொல்லில் வடிக்க முடியாத துயரக் கதையாக நீளுகின்றது என்றும் அறிந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஆதாரம்காட்டிப் பெறவும்

அரியாலையைச் சேர்ந்த ஒருவருடைய தமிழீழ மீட்புநிதிக்கான கடன் பத்திரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெறவும்.

# ஜனாதிபதிபிரகடனத்திற்குமுரணாக அதிபர் நியமனங்கள்

## - மட்டக்களப்பு ஆசிரியர்கள் முறையீடு

(மட்டக்களப்பு)

கஷ்டமான காலப்பகுதியில் பொறுப்புக்களைச் சுமந்து அதிபர் கடமைகளை கவனித்து வந்த பலர் இடைநிறுத்தப்பட்டு அவர்களது இடத்திற்கு புதிய அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு ஆசிரியர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதுவும் 01-06-93 உடன் முடிவடையும் ஒரு வருட காலப்பகுதிக்குள் அதிபர்களின் கடமையைக் கவனித்த உதவி ஆசிரியர்கள் அனைவருக்கும் அதிபர் நியமனம் வழங்கப் படும் என்ற ஜனாதிபதி பிரகடனம் விடுக்கப்பட்ட ஒரு வார காலத்தினுள் இப்புதிய நியமனங்கள் வழங்கப்பட்டு விட்டதாக ஆசிரியர்கள் பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுசனத் தொடர்புசாதனங்கள் மூலம் விடுக்கப்பட்ட ஜனாதிபதியின் இந்தப்பிரகடனம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதையும் அறிந்திருக்கவில்லையோ என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### ஆலய உற்சவம்

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலய திருநாள் கொண்டாட்டம் 8ஆம் திகதி புதன்கிழமை (08-09-93) வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றிரவு திருநாள் சிறப்பு நிகழ்ச்சியாக ஆனைக்கோட்டை ஐக்கிய ச. ச. நிலைய ஆதரவுடன் அண்ணாவியார் தம்பித்துரையின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ''பொன்னூர் செவ மாலை'' என்னும் நாட்டுக் கூத்து இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்திய குழு கொழும்பிற்கு

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் இந்திய பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரிகள் குழு ஒன்று விடுதலைப்புலிகளின் நடவடிக்கை குறித்து மேலும் சில விபரங்களை அறிந்து கொள்ள கொழும்பு வந்துள்ளது.

## மனைப் பொருளியல் கண்காட்சி

வலிகாமம் மேற்கு கல்விக் கோட்ட மனைப்பொருளியல் ஆசிரியர் கழகத்தினரால் இம்மாதம் 13ஆம் திகதி முதல் ''மனைப் பொருளியல் கண்காட்சி'' ஒன்று கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி வெகு கோலாகலமாக நடத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இம்மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 16ஆம், 17ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சிக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்படி மனைப் பொருளியல் ஆசிரியர் கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.


## பெண் ஆசிரியர்கள் தேவை

1. தையல்
2. மனையியல்

ஆகிய இரு பாடங்களுக்கும் பெண் ஆசிரியர்கள் தேவை.

காலம்:- 08 09 93 புதன்கிழமை மாலை 1-30 மணி

இடம்:- திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்பபாடசாலை

நேர்முகத்தேர்வு:- உங்களது சகல சான்றிதழ்கள், அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிக்கப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும்.

(முறைசாராக் கல்விப் பிரிவும், ஹோட்டல் முகாமைத்துவமும், தையலுக்குமான சித்தியுடையவர்கள் விரும்பத்தக்கது.)

-செஞ்சோலை

(5843)


வெல்லை அணி நின்று வித்தாகி வீழ்ந்திட்ட வித்தகனே
நற்றமிழ் மண்ணிற்கு விதை ஆனாய்
நீ நிலத்தினில் சிந்திய உதிரமடா
நிச்சயம் ஈழமாய் உதிக்குமடா.

அன்னாரின் நினைவு நிகழ்வுகள் இன்று எமதில்லத்தில் இடம்பெறும்.

மறவாமல் மனமுருகும்,

அம்பாள் வீதி, உடுவில்.

பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்.

(5848)

# நினைவு கூருகின்றோம் ...

# 1993-09-06

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா புளியங்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட,

- ★ கரன் (— — புளியங்குளம் - வவுனியா)
- ★ மகிந்தா (செல்லையா சதானந்தன்-முல்லைத்தீவு)
- ★ விஜி (விஜியராகவன்-ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)
- ★ வரன் (— மகேஸ்வரன்-போக்கணை)

1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை - இராமநாதபுரம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழினைஞன்.

1990ஆம் ஆண்டுமுல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

- பைரவி (சங்கரப்பிள்ளைபார்த்திபன்-8-ம்குறிச்சி, வந்தாறுமூலை 03-மட்டு)
- கோபிநாத் (விஜயன் குமார் - முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)
- லெப்.பெரியண்ணன் (ஐயாத்துரை அமிர்தலிங்கம்-1-ம் வட்டாரம்-மணலாறு)
- கோபால் (வேலாயுதம் சிவலிங்கம்-கொக்குத்தொடுவாய்-மணலாறு)
- 2-ம் லெப்.காதர் (பரமானந்தன் மணிவண்ணன் - புகையிரத நிலையவீதி-மன்னார்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

- லெப்.அகிலன் (கந்தையா தேவதேவா-இருதயபுரம்-மட்டு)
- சுது (அமரசிங்கம் மணியம்-8-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை-மட்டு)
- 2-ம் லெப்.ஈசன் (சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்-கணேசபுரம்-மன்னார்)
- செட்டி (பாக்கியநாதன் பிறேம்குமார்-விடத்தல்தீவு-மன்னார்)
- 2-ம் லெப் பிறேம்குமார் (கந்தையா தயாபரன்-கரவெட்டி மத்தி-யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டுநகர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

- 2-ம் லெப் தமிழ்நேசன்/ஜெயராம் (சுப்பிரமணியம் ரமேஸ்-பெரியகல்லாறு-மட்டு)
- சுபாகரன்/அனுசன் (சங்கரப்பிள்ளை குணாளன்-கல்லடி-மட்டு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

✶ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[இ/7354]

சிந்தனைக்கு

ஒரு படையணி, தன் வயிற்றின்மேல் ஊர்ந்தே முன்னேற வேண்டும்.

- நெப்போலியன் போனபார்ட்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-09-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## புதிய போர்ப் பிரகடனம்

மீண்டும் ஒரு போர்ப்பிரகடனம் சிங்கள இராணுவத்தால் விடுக்கப்பட்டுள்ளது இரண்டாவது கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர். சிங்கள அரசியல் தலைமை தனித்துவமாகவும் இராணுவத் தலைமையுடன் கூட்டாகவும், காலவரையறையுடன் கூடிய பல போர் பிரகடனங்களை காலத்திற்குக் காலம் விடுத்துள்ளனர். இந்த வகையில் இறுதியாக இராணுவத்தால் தனித்துவமாக போர்ப் பிரகடனம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. இப்போர்ப் பிரகடனமானது.வடக்கு - கிழக்குப் பகுதியில், அடுத்த ஆறு மாத காலத்திற்கு விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடும் இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும், சமரசம் என்பதற்கு இடமே இல்லை எனவும் தெரிவிக்கின்றது.

ஆனால், கடந்தகாலப் போர்ப் பிரகடனங்களும், காலவரையறைகளும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை என்பதும், காண முடியாது என்பதும் சகலருக்கும் தெரியும். இந்நிலையில் புதிய பிரகடனம் ஒன்று வெளியிடப்படுகின்றது என்பது பழைய பிரகடனங்களின் தோல்விகளை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது என்பதே பொருளாகும்.

இருப்பினும், முன்னைய பிரகடனங்களில் இருந்து இப்பிரகடனமானது சற்று வேறுபட்டதாகும். முன்னர் பொதுவாக, போர்ப் பிரகடனங்களையும், பிரச்சினைத் தீர்விற்கான காலவரையறைகளையும் அரசாங்கத்திற்கு தலைமை வகிக்கும் அரசியல்வாதிகளே பெரும்பாலும் விடுத்து வந்தனர். ஆனால், இம்முறை, அரசியல்வாதிகள் போரைப்பற்றிப் பேசிவந்தாலும், போர்ப் பிரகடனமோ, அன்றி காலவரையறையையே அறிவிக்கும் முன் இராணுவ தரப்புமுன்னின்று அறிவித்துள்ளது.

அத்தோடு, தமது திட்டம் பற்றியும், அதன் காலவரையறைகள் பற்றியும் அரசியல்வாதிகளுக்கு விளக்கவும் முற்பட்டுள்ளது. சிறிலங்கா அரசியலில் புதியதொரு பரிணாமத்தை காட்டுவதாகவே உள்ளது. இது மண்கிண்டி மலை இராணுவ முகாம் வீழ்ச்சியுடனேயே தொடங்கியது. அப்பொழுதே கூட்டுப்படை நடவடிக்கைதலைமைத் தளகர்த்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, எதிர்க் கட்சியினருக்கு இராணுவ தோல்வி பற்றி முதல் முதலில் விளக்கம் அளித்தார்.

# கம்பெனி நிர்வாகிகளின் கீழ் தோட்டங்கள்; கண்ணீர் சிந்தும் மலையகத் தொழிலாளர்கள்

மலையகத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மனநிலை கொதிநிலையை எட்டிக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அட்டன், பலகெலியா, நோர்வூட், பொகவந்தலாவ போன்ற நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டில் கடந்த மூன்று மாதங்களில் அடகு வைக்கப்பட்ட நகை எதுவும் மீட்கப்படவில்லை என்றும், மூக்குத்தி உட்பட பல சிறிய நகைகளும் கூட அடகுக் கடைகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது. இந்தக் கணிப்பீடு அங்கு நிலவும் பொருளாதார கஷ்டங்களைக் காட்டும் ஒரு குறியீடு எனக் கொள்ளப்படலாம். எழுபதுகளில் ஏற்பட்டது போன்ற உணவுப்பஞ்சத்தையும், நெருக்கடியையும் மலையகம் இப்போது எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அன்று உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இன்று உணவுப் பொருட்கள் தாராளமாக இருக்கின்றன. ஆனால் அவற்றை வாங்குவதற்குப் பணம்தான் இல்லையென்ற நிலை. ''முந்தியெல்லாம் தோட்டத்தில ஒழுங்கா வேல கெடச்சிச்சி. மிச்சம் புடிக் காட்டி கூட ஒரு மாதிரி சமாளிச்சோம். ஆனா, இப்ப அந்த மதிரி இல்ல. கெழமைக்கு மூணு நாளு வேல கெடச்சா அது புதுமையாய் இருக்கு'' என்று மஸ்கெலியாப் பகுதியின் தோட்டத் தொழிலாளி ஒருவர் தன் அங்கலாய்ப்பை வெளியிடும் அளவுக்கு மலையகத்தின் இன்றைய நிலைமை மிகவும் மோசமடைந்து போயுள்ளது.

இன்றைய இந்த நிலைமை எப்படி? ஏன்? ஏற்பட்டது என்பதை உணர்ந்து கொள்வதற்கு பெரியதொரு ஆராய்ச்சியும் தேவையில்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு சிறிலங்கா அரசினால் அரசுடைமையாக்கப்பட்டு அரச பெருந்தோட்டயாக்கம், மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை [ஜனவசம] போன்றவற்றினால் நிர்வகிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் மீண்டும் தனியார்மயமாக்கப்பட்டதன் நேரடி விளைவுகளில் இது முக்கிய

''குடியிருக்கும் லயன்கள் உங்களுக்கே உரிமையாகும். வீட்டுத் தோட்டங்கள் உங்களுக்கே முதிசம் ஆகும்'' என்ற அலைவாக்குறுதிகளை அள்ளி வீசின. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்குவதாகவும், இனிப் பாலும் தேனும் பாய்ந்தோடும் என்றும் சொரியப்பட்ட வார்த்தைகள் யாவும் கற்பாறையில் பொழிந்த மழைநீர் போல வழிந்தோடிப் போக இந்த ஒரு வருட அனுபவமே ஒரு சோகக் கதையாக மலையகத்தில் மிஞ்சிப்போய் நிற்கின்றது.

கம்பெனி நிர்வாகத்தின் கீழ் தோட்டங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றது? இதற்கு தலவாக்கலை சென்கிளயர் தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒரு சிறு உதாரணம். இத்தோட்டத்திலே கொழுந்து பறிக்கும் பெண்கள் பைகளிலேயே அவற்றைப் போட்டு வந்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றதும், ''பைகளிலே அவற்றைப் போடவேண்டாம் கூடைகளில் தான் போட வேண்டும்'' என்று கடுமையாக உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவை ஏற்க தொழிலாளர்கள் மறுத்தனர். இதனால் தொழிலாளர்களின் சம்பளத்தை கம்பெனி நிர்வாகம் வழங்கவில்லை. இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் ஆரம்பமாகியது. பத்து நாட்களுக்கு மேல வேலை நிறுத்தம் நீடித்த நிலையில் பேச்சுவார்த்தை மூலம் விவகாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. பைகளில் கொழுந்துகளை போடுவதற்கு தோட்ட நிர்வாகம் தற்காலிகமாக இணங்கியதுடன் விரைவில் தோட்ட மட்டத்தில் பேசி இதற்கு இறுதியான முடிவு காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது வருடாந்தம் 300 நாட்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்றொரு விதி கடைப்பிடிக்கப்பட்டு வந்தது வருடம் முடிவதற்கிடையில் 300 நாள் வேலை வழங்கப்படும் என்றும் வேலை கூடுதலாக உள்ள காலங்களில் வேலை நாட்கள் அதிகரிக்கும் என்றும் மற்றைய காலங்களில் குறைவாக இருக்கும் என்றும் தொழிலாளர்களுக்கு

வேலை நாட்கள் குறைக்கப்படுவதற்கு காரணம் எதுவும் கூறவேண்டிய கட்டாய நிலையில் கம்பெனி நிர்வாகங்கள் இல்லை. சுமார் 500 பேர் வரை வேலை செய்த ஒரு தேயிலைத் தோட்டத்தில் சுமார் 20 சதவீதத்திற்கும் அதிகமானோர் வேறுவேலையைத் தேடிச்சென்றுள்ள நிலை மஸ்கெலியாப் பகுதியில் காணப்படுகிறது. மேலும் பெண்களில் பலரும் தோட்ட வேலையைவிட்டு கொழும்பு போன்ற நகரங்களில் வீட்டுப் பணிப்பெண்களாக இருப்பதே மேலானது என்று கருதும் நிலை இப்பகுதியில் சாதாரணமாகியுள்ளது.

இவை மட்டுமல்ல பாடசாலை செல்லும் மாணவர்களின் வரவிலும் கூட கடந்த இல மாதங்களில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. தோட்டங்களில் வேலை குறைந்து விட்டதால் 'எடுபிடி' வேலைகளுக்காக தமது பிள்ளைகளை நகரப்புறங்களுக்கு அனுப்பும் பெற்றோரின் தொகை அதிகரித்து வருவதே பாடசாலை மாணவர்களின் வரவு வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது.

வேலை நாள் குறைப்பு ஒரு பக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றால் மறுபக்கத்தில் வேலைப்பளு அதிகரிப்பு இன்னொரு விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு பத்துக் கிலோ கொழுந்து பறிக்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கு குறைவாக பறிப்பவர்களுக்கு அரைப்பேர் — அதாவது அரைநாள் சம்பளம்தான் வழங்கப்படுகிறது. இதற்கு பண்டாரவளை பகுதியில் கிரேக் தோட்டத்து நிர்வாகம் ஒரு எடுத்துக்காட்டு. பத்துக் கிலோவுக்கு குறைவாக கொண்டு வருவோர் எட்டு மணித்தியாலத்திற்கு அதிகமாக வேலை செய்திருந்தாலும் கூட அரைப்பேர் தான் அங்கு. பொதுவாக வரட்சி நிலவும் இக்காலப்பகுதியில் ஒருவர் பத்துக் கிலோ கொழுந்து பறிப்பது இயலாத காரியம் என்று தோட்ட நிர்வாகத்திற்கு சுட்டிக்காட்டியதெல்லாம் செவிடன் காதில் ஊதியசங்காய்ப் போய்விட்டது இதனால் அரைப்பேர் வாங்கும்

வைக்கப்பட்டுள்ளது.

வேலை வழங்கப்படுவதில் தான் இத்தனை சிக்கல்கள் என்றால் ஏனைய வசதிவாய்ப்புகளும் கூட சுமுகமாக இல்லை. தொழிலாளர்கள் குடியிருக்கும் லயன்கள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டுள்ளதோ என்னவோ தெரியாது. ஆனால் நூற்றியைம்பது ஆண்டுகளுக்கும் முற்பட்ட அந்த லைக் காம்பிராக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினங்களை இதுவரை ஏற்று வந்த தோட்ட நிர்வாகங்கள் இப்போது அவற்றை நிறுத்தி விட்டன. வீடமைப்பு கூட்டுறவு சங்கத்துடன் தொடர்பு கொண்டு திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு கம்பெனி நிர்வாகங்கள் கைவிரித்து விடுகின்றன. ஆனால் வீட்டு வசதி போதாமையால் தொழிலாளர்கள் தாமாகவே அமைத்துக் கொண்ட கொட்டில்களை உடனடியாகவே உடைத்து விடும்படி தோட்ட நிர்வாகங்கள் வற்புறுத்தி வருகின்றன. அத்துடன் புதிய தற்காலிக குடிசைகள் கட்டவும் அனுமதி மறுக்கப்படுகின்றது. இது சம்பந்தமாக கேள்வி எழுப்பப்படும் போது பி. ஆர். யூ. எனப்படும் தனியார் மீள் அமைப்பு பிரிவின் உத்தரவின் படியே நடப்பதாக தோட்ட நிர்வாகம் சாட்டுச் சொல்லி விடுகிறது. இந்தப் பிரச்சினைகளால் பண்டாரவளைப் பகுதியின் ஐஸ்லேபி, வியங்காலை, பலகல, கிரேக், மாக்கந்த போன்ற தோட்டங்களில் கொந்தளிப்பு நிலைமைகள் காணப்படுகின்றன.

தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடி நடவடிக்கைகளால் தொழிலாளர்கள் மத்தியில் வேதனை மட்டுமே எஞ்சி நிற்கிறது. தொழிற்சங்க நடவடிக்கைகளோ, வேலை நிறுத்தங்களோ இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கொண்டு வருவதாக இல்லை என்று இப்பகுதியின் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் பலரும் முறையிடுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புகளுக்கு முன்னால் இருக்கும் சிறு துண்டுக் காணிகளை விவசாயத்திற்கு பயன்படுத்த இதுவரை அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. வாழை மற்றும் மரக்கறி வகைகள் இந்நிலத்தில் பயிரிடப்பட்டு வந்தது. இதில்

படுத்தி வந்த நிலத்தைப் பறிகொடுப்பதோடு அவற்றில் உள்ள உற்பத்தியையும் அனுபவிக்க முடியாத இக்கட்டான நிலைக்குள் தொழிலாளர்கள் தள்ளி விடப்பட்டுள்ளனர். தோட்ட நிர்வாகத்தின் இந்த உத்தரவுக்கு அடிபணியாத தொழிலாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை வேறு விடப்பட்டுள்ளது. சற்றும் எதிர்பாராத இந்தப் புதிய நடவடிக்கையினால் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக மலையகத் தமிழர்களான தோட்டத் தொழிலாளர்கள் எண்ணற்ற போராட்டங்களின் மூலம் பெற்றெடுத்த அற்ப சொற்ப சலுகைகளையும் தட்டிப்பறிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு தோட்ட நிர்வாகங்கள் செயற்படுகின்றன. தொழிலாளர்களை குறைந்தபட்சம் மனிதர்களாகக்கூட மதிக்காது வேலை வாங்கும் யந்திரங்களைப் போலவே கருதி கம்பெனிகளின் கீழ் தோட்ட நிர்வாகங்கள் நடத்தி வருகின்றன. இதன் ஒரு வெளிப்பாடாகவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அப்புத்தளை நீ ஊ தோட்டத்தில் மட்டும் 135 நாட்களைக் கடந்து வேலை நிறுத்தம் நீடிக்கின்றது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் சுமார் 800 வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்துள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவை தவிர இந்திய கடவுச் சீட்டைப் பெற்ற தொழிலாளர்களுக்கு வேலை வழங்க மறுப்பது, பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதிலும், அடையாள அட்டையை பெற்றுக் கொடுப்பதிலும் இழுத்தடிப்பு என்று பலவாறான பிரச்சினைகளும் நீடிக்கின்றன.

தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்பை தனியார் கம்பெனிகளிடம்விட அரசாங்கம் முன்வந்தபோது தோட்டத்தொழிலாளரின் நன்மையைக் கருதியே இதனை ஆதரித்தோம் ஆனால் இலாபம் ஒன்றையே குறியாகக்கொண்டு

இருந்து இப்பிரகடனமானது சற்று வேறுபட்டதாகும். முன்னர் பொதுவாக, போர்ப் பிரகடனங்களையும், பிரச்சினைத் தீர்விற்கான காலவரையறைகளையும் அரசாங்கத்திற்கு தலைமை வகிக்கும் அரசியல்வாதிகளே பெரும்பாலும் விடுத்து வந்தனர். ஆனால், இம்முறை, அரசியல்வாதிகள் போரைப்பற்றிப் பேசிவந்தாலும், போர்ப் பிரகடனமோ, அன்றி காலவரையறையையே அறிவிக்கும் முன் இராணுவ தரப்புமுன்னின்று அறிவித்துள்ளது.

அத்தோடு, தமது திட்டம் பற்றியும், அதன் காலவரையறைகள் பற்றியும் அரசியல்வாதிகளுக்கு விளக்கவும் முற்பட்டுள்ளது. சிறிலங்கா அரசியலில் புதியதொரு பரிணாமத்தை காட்டுவதாகவே உள்ளது. இது மண்கிண்டி மலை இராணுவ முகாம் வீழ்ச்சியுடனேயே தொடங்கியது. அப்பொழுதேகூட்டுப்படை நடவடிக்கைதலைமைத் தளகர்த்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, எதிர்க் கட்சியினருக்கு இராணுவ தோல்வி பற்றி முதல் முதலில் விளக்கம் அளித்தார்.

இந் நிலையானது சிறிலங்கா அரசியலில் இராணுவத்தின் கை ஓங்கி வருகின்றதைக் காட்டுவதாக உள்ளதா? அல்லது, இராணுவம் அண்மையில் தான் அடைந்த தோல்விகளுக்குதானே விளக்கம் கூறிக் கொள்ளட்டும் என அரசாங்கம் விரும்புவதைக் காட்டுகின்றதா? அல்லது இராணுவமும், அரசாங்கமும் சேர்ந்து எதிர்க்கட்சிகளை சமாளிக்க எடுக்கும் முயற்சி என்று கொள்வதா? என்ற கேள்விகளை எழுப்புகின்றன.

ஆனால், ஒன்று மட்டும் நிதர்சனம். சிங்கள அரசும், இராணுவமும் ஒவ்வொரு முறையும், காலவரையறையும் போர்ப் பிரகடனமும் செய்யும் பொழுது அதற்கு பலமான இராணுவத்தோல்விகளே காரணமாக இருந்து வந்துள்ளன. பாதிக்கப்பட்டு, தோல்வி மனப்பான்மையில், இராணுவச் சிப்பாய்களும், சிங்கள பேரினவாதிகளும் சோர்வடையும் போது இவ்வாறான, போர்ப் பிரகடனங்கள் வெளியிடப்படுகின்றன. தற்பொழுதும் புதிய போர்ப்பிரகடனத்திற்கான அவசியத்தை இராணுவத் தோல்விகளே ஏற்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

இதேவேளை, இராணுவத் தோல்வி, பின்னடைவு ஒவ்வொன்றின் பின்பும் சிங்கள இராணுவம் தன்னைப் புனரமைத்துக் கொள்வதிலும் வசதியைப் பெருக்கிக் கொள்வதிலும் முனைப்பாகவே இருந்துள்ளது. தற்பொழுதும், அவ்வாறானதொரு முயற்சியே இடம் பெறுகின்றது. இராணுவத்திற்கு புதிதாக ஆட்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. அதேபோன்றே ஆயுத தளபாடக் கொள்வனவிற்கு ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. அரசாங்கமும் ஒவ்வொரு தோல்வியின் பின்பும் அதிகரித்த நிதியை ஒதுக்குவதற்குத் தவறுவதில்லை.

அதாவது, இராணுவத் தோல்விகள் தொடர்கின்றபோதும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாண வேண்டும் என்பதில் சிங்கள அரசாங்கமோ, மற்றவர்களோ கவனம் செலுத்துவதாக இல்லை. இராணுவத் தோல்விகளால் மனச்சோர்வுகள் மாறிமாறி ஏற்படினும், ஒருவரை ஒருவர் மாறி மாறித் தேற்றிக் கொள்வதிலும், இராணுவ வெற்றி ஒன்றிற்காக தம்மை தயார்படுத்துவதிலுமே அக்கறையாகவுள்ளனர். இந்நிலையில் சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்தில் முழுமையாகத் தோற்கடிக்கப்படும் வரை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது எத்தளவு சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதே.

...யின் தோட்டத் தொழிலாளி ஒருவர் தன் அங்கலாய்ப்பை வெளியிடும் அளவுக்கு மலையகத்தின் இன்றைய நிலைமை மிகவும் மோசமடைந்து போயுள்ளது.

இன்றைய இந்த நிலைமை எப்படி? ஏன்? ஏற்பட்டது என்பதை உணர்ந்து கொள்வதற்கு பெரியதொரு ஆராய்ச்சியும் தேவையில்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு சிறிலங்கா அரசினால் அரசுடைமையாக்கப்பட்டு அரச பெருந்தோட்டயாக்கம், மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை [ஜனவசம] போன்றவற்றினால் நிர்வகிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் மீண்டும் தனியார் மயமாக்கப்பட்டதன் நேரடி விளைவுகளில் இது முக்கியமானது. ஒரு வருடத்திற்கு முன்பு தோட்டங்களின் முகாமைத்துவம் கம்பெனிகளின் கைக்கு மாற்றப்பட்ட போது "தொழிலாளர்களின் வயிறுகளில் பால் வார்க்கப்படும்" என்றே அரசாங்கசார்புதொழிற்சங்கங்கள் நம்பிக்கை ஊட்டின. இந்த நாட்டுப் பிரஜைகளாக்கப்பட்டு விட்டீர்கள். இனி உங்களுக்கு ஒரு குறையும் வராது என்று அவை வீராப்பு பேசின

...கொண்டு வரப்பட்டது. பைகளில் கொழுந்துகளை போடுவதற்கு தோட்ட நிர்வாகம் தற்காலிகமாக இணங்கியதுடன் விரைவில் தோட்ட மட்டத்தில் பேசி இதற்கு இறுதியான முடிவு காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது வருடாந்தம் 300 நாட்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்றொரு விதி கடைப்பிடிக்கப்பட்டு வந்தது வருடம் முடிவதற்கிடையில் 300 நாள் வேலை வழங்கப்படும் என்றும் வேலை கூடுதலாக உள்ள காலங்களில் வேலை நாட்கள் அதிகரிக்கும் என்றும் மற்றைய காலங்களில் குறைவாக இருக்கும் என்றும் தொழிலாளர்களுக்கு கூறப்பட்டு இருந்தது ஆனால் இந்த நிலை இப்போதும் அமுலில் இருக்கிறதா என்பதே தெரியாத நிலையில் தொழிலாளர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது வேலை வழங்கப்படும் நாட்களில் மட்டும் 80 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. ஏனைய நாட்களில் லயன்களுக்குள்ளிருந்து கொண்டு கொட்டாவி விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைதான் தொடர்கிறது.

...றுக் குறைவாக பறிப்பவர்களுக்கு அரைப்பேர் — அதாவது அரைநாள் சம்பளம்தான் வழங்கப்படுகிறது. இதற்கு பண்டாரவளை பகுதியில் கிரேக் தோட்டத்து நிர்வாகம் ஒரு எடுத்துக்காட்டு. பத்துக் கிலோவுக்கு குறைவாக கொண்டு வருவோர் எட்டு மணித்தியாலத்திற்கு அதிகமாக வேலை செய்திருந்தாலும் கூட அரைப்பேர்தான் அங்கு. பொதுவாக வரட்சி நிலவும் இக் காலப்பகுதியில் ஒருவர் பத்துக் கிலோ கொழுந்து பறிப்பது இயலாத காரியம் என்று தோட்ட நிர்வாகத்திற்கு சுட்டிக்காட்டியதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகப் போய்விட்டது இதனால் அரைப்பேர் வாங்கும் தொழிலாளர் தொகை இன்று நாளுக்குநாள் அதிகரிக்கிறது.

இதே போல் ஒரு ஏக்கர் நிலத்தில் கவ்வாத்து வெட்டுவதற்கு முன்பு 18 பேர் அனுமதிக்கப்பட்டனர். இப்போது இது 13 பேராக குறைக்கப்பட்டுள்ளது. 265 தேயிலைச் செடிகளுக்கு ஒருவர் கவ்வாத்து வெட்டினாலே முழுச் சம்பளம் இல்லாவிட்டால் அரைப்பேர் தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் கவ்வாத்து வெட்டும் வேலையே நிறுத்தி...

...தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடி நடவடிக்கைகளால் தொழிலாளர்கள் மத்தியில் வேதனை மட்டுமே எஞ்சி நிற்கிறது. தொழிற்சங்க நடவடிக்கைகளோ, வேலை நிறுத்தங்களோ இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கொண்டு வருவதாக இல்லை என்று இப்பகுதியில் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் பலரும் முறையிடுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புகளுக்கு முன்னால் இருக்கும் சிறு துண்டுக் காணிகளை விவசாயத்திற்கு பயன்படுத்த இதுவரை அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. வாழை மற்றும் மரக்கறி வகைகள் இந் நிலத்தில் பயிரிடப்பட்டு வந்தது. இதில் கிடைக்கும் வருமானம் தோட்டத் தொழிலாளர்களுக்கு உபரிவருமானமாக இருந்தது. ஆனால் இப்போது இவற்றில் இருக்கும் வேளாண்மையை அப்புறப்படுத்தி இத் துண்டு நிலங்களைக் கூட தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தோட்ட நிர்வாகத்தின் இந்தத் திடீர் நடவடிக்கையால் பல ஆண்டு காலம் பயிர்ச்செய்கைக்காக பயன்...

...டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவை தவிர இந்திய கடவுச் சீட்டைப் பெற்ற தொழிலாளர்களுக்கு வேலை வழங்க மறுப்பது, பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதிலும், அடையாள அட்டையை பெற்றுக் கொடுப்பதிலும் இழுத்தடிப்பு என்று பலவாறான பிரச்சினைகளும் நீடிக்கின்றன.

தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்பை தனியார் கம்பெனிகளிடம்விட அரசாங்கம் முன்வந்தபோது தோட்டத்தொழிலாளரின் நன்மையைக்கருதியே இதனை ஆதரித்தோம் ஆனால் இலாபம் ஒன்றையேகுறியாகக்கொண்டு இயங்கும் கம்பெனிகளால் தோட்டங்களில் பல புதிய பிரச்சனைகள் தலைதூக்கி விட்டன என்பது உண்மையே என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம்.எஸ். செல்லச்சாமி இப்போது அங்கலாய்க்கிறார் கையைப் பிசைந்தபடி.

—இளையவன்—

# மண்டல் கமிஷன் பரிந்துரை அமுலாக்குவது பற்றி ஆராய்வு

வி. என். காட்கில்

[டில்லி]

மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுலாக்குவது குறித்து ஒரு கொள்கையை உருவாக்குவதற்காக, காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒருகுழுவை அமைத்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி எடுத்த மற்றுமொரு தீர்மானத்தில், அண்மையில் நடைபெறவுள்ள உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இமாசலப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின சட்டப் பேரவைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான மத்திய பாராளுமன்றக் குழுவிற்கு ஏழு உறுப்பினர்களை நியமிக்கவும். தேர்தல் கமிட்டிகளை அமைக்கவும் கட்சித் தலைவரும், பிரதமருமான பி. வி. நரசிம்மராவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி பின்பற்ற வேண்டிய உத்தி முறை பற்றி விவாதிக்கப்பட்டதாகவும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான கமிட்டி குறித்து மத்திய நல வாழ்வுத்துறை அமைச்சர் சீதாராம்கேசரி அண்மையில் அறிவிப்பார் எனவும், கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி. என். காட்கில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கட்சியின் கொள்கை அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பு என். டி. திவாரி, சரத்பவார், ராஜேஷ் பைலட், ஜனார்த்தன் பூஜாரி சுசில்குமார் ஷிண்டே ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், இக் கூட்டத்தில் கேரள முதல்வர் கருணாகரன், ஏ.கே.அன்ரனி, குலாம நபிஆஸாத் ஆகியோர் மட்டுமே கலந்து கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இஸ்ரேலுக்கு விஜயம்

(டில்லி)

குஜராத் முதல்வர் சிமன் பாய் பட்டேல் தலைமையிலான குழுவொன்று இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளது. இஸ்ரேலின் நவீனம் அடைந்துள்ள விவசாய முறை பற்றியும் சொட்டுநீர் பாசனம் பற்றியும் இந்த ஐந்து நாள் விஜயத்தின் போது இவர்கள் ஆராயவுள்ளனர்.

# இஸ்ரேலிய பாலஸ்தீனிய ஒப்பந்தம் செப்டம்பர் 13-ல் கையெழுத்தாகும்?

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய பாலஸ்தீனியசுயநிர்ணய உடன்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து டெல்அவிவ்விலும், காஸா மற்றும் மேற்குக்கரை பகுதியிலும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்ட டெல்அவிவ் பேரணியில் ஒப்பந்த வாசகத்தை ஆதரிப்பது என்றுபாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரதான அணியான அல்-பதாஹ் மேற்கொண்டிருக்கும் தீர்மானத்திற்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காஸாப்பகுதியிலும் மேற்குக்கரையிலும் நூற்றுக்கணக்கானபாலஸ்தீனியர்களும் பேரணிகளைநடத்தியுள்ளனர்.

இதனிடையே ஜோர்தானின் மன்னர் ஹுசைனும் ஒப்பந்தத்தை வரவேற்றிருப்பதுடன் இது ஒரு துணிச்சலான முடிவு என்றும் பொறுப்பான செயல் என்றும் தெரிவித்தார்.

எனினும் பாலஸ்தீனிய இஸ்லாமிய இயக்கமான ஹமாசும் பாலஸ்தீனிய விடுதலைக்கான மக்கள் முன்னணியும் இந்த ஒப்பந்தத்தைக் குறை கூறியிருப்பதுடன் இஸ்ரேலுக்கு எதிராக யுத்தம் தொடரும் என்றும் அறிவித்துள்ளன.

இருந்தும் இஸ்ரேலும் பாலஸ்தீனியரும் இந்த ஒப்பந்தத்தில் இம்மாதம் பதின்மூன்றாம் திகதியன்று கையெழுத்திடலாம் என்று அமெரிக்கா ஆலோசனை கூறியுள்ளது.

## இந்திய சீன நட்புறவு மேலும் பலமடையும்

பிரதமமந்திரி நரசிம்மராவ் பீகிங்கிற்கு விஜயம் செய்யும் போது எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைபற்றியும், வேறு பல விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிட் நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அத்துடன் மாறி வரும் உலகப் பொருளாதார சூழல் சர்வதேச மன்றங்களில் இந்திய சீன ஒத்துழைப்பு என்பன பற்றியும் இப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பீகிங்கின் உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நரசிம்மராவ் தென்கொரியா பயணமாவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது சுற்றுலா, கலாசார பரிவர்த்தனை, விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பன போன்றவிடயங்களில் இந்திய சீன அரசுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வனம் வளர்த்து மனம் மகிழ்வோம்.

ஈழநாதம்

# நாம் ஓட எத்தனித்த போது கலிபர் தாக்குதல் நடந்தது

## காயமடைந்தவர் விவரிப்பு

(தென்மராட்சி)

''எம்மை நோக்கி 15 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக கலிபர் தாக்குதலை இரு 'புக்காரா' விமானங்களும் நடத்தின. நாம் மரத்தினை சுற்றிச் சுற்றி படுத்தும், எழும்பியும், உருண்டும் ஓடிய போதிலும் எனது காலில் காயம் ஏற்பட்டது என்னோடு எல்லோருமாக எட்டுபேர் வரை இப்படியாக மயிரிழையில் உயிர் தப்பினோம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை அல்லிப்பளை இறங்குதுறைப்பகுதியில் தாக்குதலை நடத்திய புக்காரா விமானத் தாக்குதலால் காலில் காயமுற்ற அப்பகுதி கடை ஊழியரான சு. செல்வரத்தினம் [வயது 18] என்பவர் நேற்றுக் காலை அல்லிப்பளை கரையில் வைத்து எமது தென்மராட்சி செய்தியாளருக்கு விபரித்தார். சரியாக இரவு 11-57ற்கு நாம் ஆழ்ந்த நித்திரையில். எமது கடையில் 8 பேர் இருந்தோம் அப்போது ஆனையிறவு முகாம் பகுதியில் இருந்து பெரும்இரைச்சலுடன் வான் பிராந்தியத்தில் விமானம்வருவதை அறிந்தோம்.

நாம் திக்குத்திக்காகஓட முயற்சிக்க முன்பே ஒரு விமானம் பேரிரைச்சலோடு வருவதைக் கண்டதும் எல்லோரும் படுத்தோம். பின்பு எல்லோரும் பற்றையை நோக்கி ஓடும் போது எம்மை நோக்கி கலிபர் தாக்குதல் விமானத்தில் இருந்து நடாத்தப்பட்டது.

நாம் தெய்வாதீனமாக குண்டு வீச்சிலும், கலிபர் தாக்குதலிலும் மயிரிழையில் உயிர் தப்பினோம் என்றார். இத் தாக்குதலில் தென்னை மரங்களில் பல இடங்களில் ரவை துளைக்கப்பட்டதாகவும் கூறினார். (86)

---

# கலந்துரையாடல்

எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள், ஊழியர்கள், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்கள், ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர் சங்கம், தச்சுத் தொழிலாளர் சங்கம், சீமெந்துக் கட்டடத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், நகைத் தொழிலாளர் சங்கம், தமிழ் பேசும போக்குவரத்து ஊழியர் சங்கம், வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், ஆலை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம், ஆங்கில மருந்து விற்பனையாளர் சங்கம் முதலிய வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

---

# பி. எல். ஒ உடன் ஒப்பந்தம் இஸ்ரேல் பின்வாங்காது

## வெளியுறவு அமைச்சர் உறுதி

(டெல்அவிவ்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதான ஒப்பந்தத்தை செய்து கொள்ளும் தீர்மானத்திலிருந்து இஸ்ரேல் பின்வாங்கப் போவதில்லை என இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரெஸ் தெரிவித்துள்ளார்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நடத்தப்பட்ட இரகசியப் பேச்சுகளின் விபரங்களை அமைச்சரவைக்கு எடுத்துக் கூற முன் அவர் இவ்வாறு கூறினார். உத்தேச ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அம்சங்கள் பற்றி இஸ்ரேல் அமைச்சரவை நேற்று ஆராய இருந்தது. இதேவேளை யாசீர் அரபாத்தும் உத்தேச ஒப்பந்தத்திற்கு அரபு நாடுகளின் ஆதரவை பெறும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். இதன் பொருட்டு அவர் எகிப்து அரசுடன் தற்போது பேச்சு நடத்திய பின்னர் சிரியா புறப்படத் தயாராகி வருவதாக தெரியவருகிறது

## உறவு முறிவடையும் ஈராக் எச்சரிக்கை

(பக்தாத்)

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான உத்தேச சமரசத்திட்டத்தை ஈராக் எதிர்த்துள்ளது. பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தின் நீண்டகால நட்புறவை ஈராக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது இந்த சமரசத் திட்டம் ஆபத்தானது என ஈராக் அரசின் ஆதரவுப் பத்திரிகையான அல்- துவாரா தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்கள் ஆற்றிலிருந்து கடலில் வீசப்படுவர். பாலஸ்தீனத்தை இஸ்ரேல் அங்கீகரிப்பதன் மூலம் பக்தாத்- பாலஸ்தீன உறவு பாதிப்படையவுள்ள அபாயம் இருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

---

# உலக மதங்களின் மாநாடு சிக்காகோவில் நிறைவுற்றது

(சிக்காக்கோ)

உலக மதங்கள் ஒன்றியத்தின் மாநாடு நேற்று முன்தினம் சிக்காக்கோவில் நிறைவு பெற்றது. ஒரு நூற்றாண்டு காலத்தின் முன்பு இந்த வகையில் நடைபெற்ற முதலாவது மாநாட்டின்போது மதங்களின் தலைவர்கள் பலரும் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

கடந்த எட்டு நாட்களாக நடந்த இம் மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டதோடு, ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் மதத் தலைவர்கள் வகுத்த ஒழுக்க நெறிமுறை நடவடிக்கைமூலம் மதத்தின் பெயரால் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுவதையும், மற்றும் பகைமையும் கண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பௌத்த, கிறிஸ்தவ, இந்து சமய, ஜெயின, யூத, இஸ்லாமிய, சீக்கிய மதங்கள் உட்பட பல் வேறு மதங்களையும் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# இந்தியப்பிரதமர்ஜனாதிபதி கருத்து வேறுபாடு

## கல்கத்தா தினசரி

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கும் ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு வலுத்து வருவதாக கல்கத்தாவில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது

ஜனாதிபதி மாளிகையிலிருந்து அனுப்பப்பட்ட ஆறு கடிதங்களுக்கு பிரதமர் அலுவலகத்தில் இருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை ஜனாதிபதியை சந்திக்கச் சென்ற சிரேஷ்ட அதிகாரியிடமும், அமைச்சர் ஒருவரிடமும் நரசிம்மராவ் ஜனாதிபதியை நேரில் சந்தித்து சில விபரங்களை பேசவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

நரசிம்மராவ் அரசின் கொள்கைகள் சிலவற்றின் விளைவுகள் குறித்து ஜனாதிபதி சர்மா மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சுதந்திரதின உரையை ஜனாதிபதி சர்மா மிகவும் சுருக்கமாக 9 நிமிடங்களில் முடித்துக்கொண்டார். இது அவருடைய அதிருப்தியை காட்டுவதாகவும் இந்தியா

---

# மதமாற்றல் தடுப்புச் சட்டம் அமுலாக்கப்படவேண்டும்

## பௌத்ததேரர் கோரிக்கை

(கொழும்பு)

இந்தியா, நேபாளம், சிங்கப்பூர், மலேசியா அரசுகளைப் பின்பற்றிச் சிறிலங்கா அரசும் மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று அமரபுர மகாநாயக்கர் அது.வண.மடிகே சிறி பஞ்ஞசீல மகாதேரர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மகா சங்கத்தினர் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா, பாராளுமன்றம் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பொது நிலையினர் கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியின்றிப் 18 வயதுக்குக் குறைந்தவர்களை மதமாற்றம் செய்வது சட்ட விரோதமாகும் என்றார் அவர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஏனைய நாடுகளின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி மதமாற்றம் செய்து வரும் பௌத்தர் அல்லாத குழுக்களின் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இந்தக் குழுக்கள் அந்நிய நாட்டு நிதி உதவியுடன் மதமாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஒருவர் தான் விரும்பிய மதத்தை தழுவுவதற்கு உரிமையுண்டு. ஆனால் பல நன்மைகள் மற்றும் ஊக்குவிப்புகள் எதுவும் இல்லாமல மதமாற்றம் நடைபெறலாம். சலுகைகள் மற்றும் நிதிஉதவி வழங்கி நடைபெறும் மாற்றங்களுக்குத் தடைவிதிக்க வேண்டும்.

மதமாற்றம் செய்வதைத் தடுக்காது போனால் அந்நிய உதவியுடன் இயங்கும் குழுக்களுக்கு எதிராகப் பௌத்தர்கள் போரிட வேண்டி ஏற்படும். இதனால் நாட்டில் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படலாம்.

வஞ்சகமான முறையில் மதமாற்றம் செய்வது குறித்து ஆயர் ஒஸ்வால்ட் தோமஸ் உட்பட ஏனைய மதத் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். இத் மதமாற்றத்துக்குப் பின்னால் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் சில குழுக்கள் செயற்படுவதாகக் கத்தோலிக்கத் திருச்சபையும் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

---

அரசின

அரசு நிராகரித்தமை குறித்து கருத்து வெளியிட்ட ரணில

---

விடுதலைப்புலிகள்

யுள்ளது. இதை இராணுவ அதிகாரிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். யாழ் குடா கடலில் கடற்புலிகள் இயந்திர துப்பாக்கி, ரொக்கட்டுகளுடனும் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்றனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

---

# இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்ட 27 இலங்கை மீனவர்களை விடுவிக்க அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த மூன்று மாதகாலமாக இந்திய அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 27 இலங்கை மீனவர்களையும் விடுவிக்குமாறு மீன்பிடித் துறையமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

கைதான மீனவர்கள் மீது அவசர வேளைகளில் கரையிலிருந்து விடுக்கப்படும் உத்தரவுக்கு ஏற்ப மீனவர்கள் செயற்படுவதற்காகவே இவை பொருத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

இ குறித்து இந்திய அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பயங்கரவாதிகளல்ல மீனவர்களை மத்திய அரசு விடுவிக்க வேண்டிய அறிவுறுத்தல்களை தமிழக ஆந்திர மாநில அரசுகளுக்கு பிறப்பிக்கவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஆயுதங்களுடன்

சுமார் 20, 000 மீனவர்களு

---

உள்வந்த வெளிச்சென்ற

கல்கத்தாவில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை

தங்களுக்கு பிரதமர் அலுவலகத்தில் இருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை ஜனாதிபதியை சந்திக்கச் சென்ற சிரேஷ்ட அதிகாரியிடமும், அமைச்சர் ஒருவரிடமும் நரசிம்மராவ் ஜனாதிபதியை நேரில் சந்தித்து சில விபரங்களை பேசவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

நரசிம்மராவ் அரசின் கொள்கைகள் சிலவற்றின் விளைவுகள் குறித்து ஜனாதிபதி சர்மா மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சுதந்திரதின உரையை ஜனாதிபதி சர்மா மிகவும் சுருக்கமாக 9 நிமிடங்களில் முடித்துக்கொண்டார். இது அவருடைய அதிருப்தியை காட்டுவதாகவும் இந்தியா சவால்களைத் தானாகவே நிறைவேற்றும் திறனை அடையவேண்டும் என்று சர்மா தமதுரையில் குறிப்பிட்டது, நரசிம்மராவ் அரசின் தாராளமயக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உள்ளதாகவும் கருதப்படுகிறது.

தெரிவித்தார்.

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்ட

# 27 இலங்கை மீனவர்களை விடுவிக்க அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த மூன்று மாதகாலமாக இந்திய அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 27 இலங்கை மீனவர்களையும் விடுவிக்குமாறு மீன்பிடித் துறையமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

கைதான மீனவர்கள் மீது இந்திய அதிகாரிகள் சுமத்தியுள்ள பிரதான குற்றச்சாட்டு இவர்களது படகுகளில் நவீன வானொலி தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தது என்பதாகும். ஒன்பது மீன்பிடி படகுகளில் இவ்வாறான தொடர்பு சாதனங்கள் காணப்பட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது அநேகமான பெரிய மீன்பிடி படகுகளில் இத்தகைய தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என நாம் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளோம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் மைக்கல் பெரேரா அவசர வேளைகளில் கரையிலிருந்து விடுக்கப்படும் உத்தரவுக்கு ஏற்ப மீனவர்கள் செயற்படுவதற்காகவே இவை பொருத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

இ குறித்து இந்திய அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பயங்கரவாதிகளல்ல மீனவர்களை மத்திய அரசு விடுவிக்க வேண்டிய அறிவுறுத்தல்களை தமிழக ஆந்திர மாநில அரசுகளுக்கு பிறப்பிக்கவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

சுமார் 20,000 மீனவர்களுக்கு அடையாள அட்டைகளையும் 2500 ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு அனுமதிப் பத்திரங்களையும் ஆங்கில மொழியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

### ஆயுதங்களுடன்

வரப்படுவதாக கருதப்படுகின்றது எனவும் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த சில நாட்களாக தமிழ்நாடு கன்னியாகுமரியிலிருந்து கேரளாவின் எர்ணாகுளம் வரை இரவு ரோந்து நடைபெற்று வருகிறது. பம்பாயிலும் கல்கத்தாவிலும் அண்மையில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களை அடுத்து இந்தியாவின் மேற்கு கரையில் வெடிமருந்து கடத்தலை தடுக்கும் பொருட்டு இந்திய கடற்படையின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இணைவு குறித்து காமினி முடிவு எடுக்க முடியாது

ஜி. எம். பிரேமசந்திர தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதிர்கால அரசியல் பங்களிப்பு பற்றி சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிர்க் கட்சி கூட்டணியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துமென ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ஜி எம் பிரேமச்சந்திர தெரிவித்தார்.

தாம் ஐ தே க. கட்சியுடன் சேரும் நோக்கமில்லையென்றும் அவ்வாறு இணைந்தால் முன்னணியின் தனித்துவம் பேணப்பட்டேயாக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கட்சித்தலைவர் காமினி திசநாயக்கா ஐ தே. கவுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும் சேர்வது பற்றி கட்சியின் அரசியல் குழுவே முடிவுசெய்யுமெனப்பிரேமச்சந்திர மேலும் தெரிவித்தார்.

### வர்த்தகர்

சங்கங்களின் உறுப்பினர்கள், வர்த்தக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### பொருள்கள்

தனியாருக்கு 50 துவிச்சக்கர வண்டிகள், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாக்கு, சர்க்கரை மற்றும் கெயர் நிறுவனத்திற்கு பெற்றோல், இவை தவிர அடையாள அட்டைகள், இலங்கை வங்கிக்கென நான்கு வங்கிப் பொதிகளும் வந்தன.

'ருகுணு' கப்பலில் சமநல சேவை திணைக்களத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம், அமோனியம் சல்பேற்று, ரி எஸ் பி. உரம், ரி. டீ. எம் உரம், வி. மிக்ஸர் உரம், எம் ஓ பி. உரம் மற்றும் வாளி வகைகளும் வந்தன. வீதி திருத்த வேலைக்கென தார் எடுத்து வரப்பட்டன. (யோ)

### குடியேற்றத்திற்கு

டங்களையும், விவசாய உபகரணங்களையும் தோளில் சுமந்து வயல்களுக்குச் செல்கிறார்கள், இவ்வாறு லதிபண்டுல மாவறாமபோதிருந்த ராமய பீடாதிபதி வண. நாகலோகம சுமண தேரர் தெரிவித்தார்.

டெகிவத்டக்கந்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

### பௌத்தர்கள்

யாக மொழி ரீதியாக மற்றும் இன வேறுபாடுகளை பயன்படுத்தி 1940, 1950, 1980களில் இந்நாட்டின் பௌத்த கலாசாரத்தை அழிக்க முயன்ற சமூக விரோத சக்திகள் இந்த நாட்டில் சமய குழப்பம் ஒன்றை உருவாக்கி தமது இலக்கை அடைய முயன்று வருகின்றன எனவும்பௌத்த காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மகாசங்கத்தினர் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா, பாராளுமன்றம் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பொது நிலையினர் கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியின்றிப் 18 வயதுக்குக் குறைந்தவர்களை மதமாற்றம் செய்வது சட்ட விரோதமாகும் என்றார் அவர்

### அரசின

அரசு நிராகரித்தமை குறித்து கருத்து வெளியிட்ட ரணில சோமாலியாவிலும பொஸ்னியாவிலும, கம்போடியாவிலும் ஐ.நா. ஏதாவது நன்மை செய்துள்ளதா? இங்குள்ள நிலைமையும் அந்நாடுகளில் காணப்படும நிலைமைகளும் வேறுபட்டவை. 1983 நிலைமை போன்று இப்போது இங்கு இனமோதல ஏதும நடைபெறவில்லை. மோதல்கள் இப்போது வடக்கிலும், கிழக்கில் சில இடங்களிலுமே நடைபெறுகிறது. மாகாண, பிரதேச நிர்வாகங்களுக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்குவதன் மூலம் போரை முடிவுக்கு கொண்டுவர முடியும. இதை நாம் நமக்குள்ளேயே செய்து கொள்வோம் இதற்கு ஐ.நாவின் தலையீடு அவசியமில்லை என்றும் அவர் கூறினார்.

மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்க எந்த சட்ட ரீதியான அதிகாரமும இல்லை வடக்கு கிழக்கு பகுதிக்கு என விசேடமாக ஏதாவது அமைப்பை உருவாக்குவது என்பது அனைத்து கட்சிகளாலும் பரிசீலிக்க வேண்டியதொன்று என்றும் பிரதமர் ரணில் அங்கு மேலும் தெரிவித்தார்.

### சமஷ்டி

காத பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்ற கருத்து இருப்பதாகக் குறிப்பிட்ட அவர் அது தவறு, அமைதியை விரும்பும் கட்சிகளும், அமைப்புகளும், இயக்கங்களும், சிங்கள செய்தியாளர்களும் நேரே எம்முடன் பேசினால எமது உண்மையான தன்மையைப் புரிந்து கொள்வார்கள் என்றும் கூறினார்.

அத்தோடு, இலங்கையில் பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் இனப்போரை முடிவிற்குக் கொண்டுவர சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளதாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

தடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இந்தக் குழுக்கள் அந்நிய நாட்டு நிதி உதவியுடன் மதமாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஒருவர் தான் விரும்பிய மதத்தை தழுவுவதற்கு உரிமையுண்டு. ஆனால் பல நன்மைகள் மற்றும் ஊக்குவிப்புகள் எதுவும் இல்லாமல மத மாற்றம் நடைபெறலாம். சலுகைகள் மற்றும் நிதிஉதவி வழங்கி நடைபெறும் மாற்றங்களுக்குத் தடை விதிக்க வேண்டும்.

மதமாற்றம் செய்வதைத் தடுக்காது போனால் அந்நிய உதவியுடன் இயங்கும் குழுக்களுக்கு எதிராகப் பௌத்தர்கள் போரிட வேண்டி ஏற்படும். இதனால் நாட்டில சமாதானத்துக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளார்கள். இத் மதமாற்றத்துக்குப் பின்னால் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் சில குழுக்கள் செயற்படுவதாகக் கத்தோலிக்கத் திருச்சபையும் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

### விடுதலைப்புலிகள்

யுள்ளது. இதை இராணுவ அதிகாரிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். யாழ் குடா கடலில் கடற்புலிகள் இயந்திரத் துப்பாக்கி, ரொக்கட்டுகளுடனும் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்றனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.


## பதவி வெற்றிடங்கள்

கிளிநொச்சியில்
இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு

பக்கம் கட்டுநர்,
அச்சுக் கோர்ப்பாளர்,
சிலிடர், பிளேற்றன்
இயந்திர இயக்குநர்,
பைண்டேர்ஸ்
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

சம்பளத்துடன் தங்குமிடவசதியும், சாப்பாடும் ஒழுங்கு செய்து தரப்படும்.
நேரில் வரவும்.

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(இ)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 05-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10798

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9487, 27-4019, 41-9876, 27-3903, 26-5848
26-6029, 26-1169, 24-4992, 24-6339, 24-4238
26-6613, 27-4920, 27-0849, 26-3998, 26-6062
27-2016

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4207, 26 7546, 24-5461, 40 6979, 41-1227
28 3233, 24 6439 26-8419, 26-1728, 24-0422
43 3854, 26-6264, 42-2151, 28-0882, 24-6431
26-3495, 27 4630, 24-6280, 26-5604, 24-4153
26-8746, 26 3146, 27-4023.


## மரண அறிவித்தல்
### சோமசுந்தரக்குருக்கள் கோவிந்தராஜா
(சங்கீத ஆசிரியர்)

வல்வெட்டித்துறை நெடியகாட்டை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர் கோவிந்தராஜா அவர்கள் [5-9-93] ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார். இவர் பர்வதாம்பாளின் அன்புக்கணவரும், மகாராஜா [தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கம்], நந்தகோபால் [நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார்கோவில்பிரதமகுரு], பொன்னம்மா [சங்கீத ஆசிரியர்], பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, நவரத்தினம்பாள், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி [D O A. மகாவலி], கதிரைமலை [ஓய்வு பெற்ற அரசாங்க இலிகிதர்] ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரி [U.K], பரமேஸ்வரன் [கனடா], ஸ்ரீஸ்கந்தராஜா [நவஉதயம], உதயகுமாரி, உதயகுமார் [சுவிஸ்], கேதீஸ்வரி, வல்லிகாந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், ஸ்ரீஸ்கந்தராஜா [U K], அருந்தவநாயகி, சோதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், வனஜா, வரதா, வற்சலா, ஸ்ரீதரன், சௌதாமினி ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகஇன்று திங்கட்கிழமை [6-9-93] நண்பகல் 2-00 மணியளவில் நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
141, பருத்தித்துறை வீதி, கோ. ஸ்ரீஸ்கந்தராஜா (மகன்)
நல்லூர். (5858) நவஉதயம்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது